ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2514/44 - 2026 නොවැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2026.11.13

2514/44 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் மஹர பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

கேட்டு விலகியமை காரணமாக மஹர பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ், தவிசாளர் பதவி வகித்த திரு. கலுஆரச்சிகே அதுல ஜயன்த் என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக் கட்சியை சேர்ந்தவரும் மஹர பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு திரு. ஜயசிங்ஹ ஆரச்சிலாகே சுமித் ஆனந்த என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளராதலாலும்;

மஹர பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அரம்பகே அயன்தா ஆனந்தி ஆகிய நான், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு, திரு. ஜயசிங்ஹ ஆரச்சிலாகே சுமித் ஆனந்த என்பவர் மஹர பிரதேச சபையின் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. அயன்தா ஆனந்தி,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மஹர பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கம்பஹா,
2026,நவெம்பர் 13.

EOG 11 - 0097

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*